DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 43 / 2021
Deposition of PW2 – திரு. சென்றாயன் (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.05.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சாட்சி சொல்லுவதற்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை இந்த வழக்கின் புகார்தாரர் பொன்னுச்சாமிதான் என்னை அழைத்து வந்தார். நான் 12ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். நான் புகார்தாரர் நடத்தும் பைனாஸ் கம்பெனியில் வேலை பார்க்கவில்லை. இந்த புகார்தாரர் அவருடைய பைனாஸ் கம்பெனியில் இருந்து யார்யாருக்கெல்லாம் கடன் கொடுப்பாரோ அப்பொழுதெல்லாம் புகார்தாரர் என்னை வைத்துதான் கடன் கொடுப்பார் என்று சொன்னால் இல்லை. நான் புகார்தாரரின் பைனாஸ் கம்பெனிக்கு வாரத்திற்கு நான்கு அல்லது ஐந்து முறை செல்வேன். காலை மாலை இரண்டு முறை செல்வேன். நான் இந்த வழக்கு தேதி சமயத்தில் நான் காய்கறி வேலை செய்தேன். தற்சமயம் கடந்த 6 மாதங்களாக ஆண்டிபட்டி ஸ்ரீ ரேணுகா பைனாஸில் வேலை செய்கிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்யும் போது தினசரி காலை 6 மணி முதல் 10 வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை வியாபாரம் செய்வேன். புகார்தாரரும் நானும் ஒரே சமுதயத்தை சேர்ந்தவர்கள். புகார்தாரர் எதிரிக்கு எந்த தேதியில் எவ்வளவு பணம் வட்டிக்கு கடன் கொடுத்தார் எவ்வளவு வட்டி வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதை போல் இந்த புகார்தாரர் யார்யாருக்கெல்லாம் கடன் கொடுத்துள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு காசோலையில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் எதிரி காசோலையில் கையொப்பம் செய்து கொடுத்தார் அந்த காசோலையை நான்தான் பூர்த்தி செய்தேன். இந்த வழக்கு காசோலையில் எதிரி கையொப்பம் மட்டும் செய்தார் மற்ற விபரங்களை காசோலையில் நான்தான் பூர்த்தி செய்தேன் என்ற விபரத்தினை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் காசோலையில் 8 லட்சம் தொகையை பூர்த்தி செய்தேன். நான் காசோலையில் தொகையை எண்ணால் எழுதினேனா அல்லது எழுத்தால் எழுதினேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. இதை தவிர நான் காசோலையில் வேறு எதுவும் பூர்த்தி செய்யவில்லை. நான் சொன்ன

தேதியில் புகார்தாரரின் பைனாஸ் கம்பெனிக்கு செல்லவில்லை என்றும் எதிரி அங்கு வரவில்லை என்றும் எதிரியை நான் பார்க்கவில்லை என்றும் வழக்கு காசோலையை எதிரி புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும் புகார்தாரும் ஒரே சமுதயத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.12 16:09:05 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 43 / 2021
Deposition of PW1 – திரு. பொன்னுச்சாமி (கு.வி)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.05.2026.
எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ராஜய்யா என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். நான் பைனான்ஸ் தொழிலினை 1994 ம் வருடத்தில் இருந்து செய்துவருகிறேன். அதற்கு முன்பு நான் நெசவு தொழில் செய்து வந்தேன். தற்போது நெசவு தொழில் செய்யவில்லை. எனக்கு நெசவு தொழில் செய்ய விருப்பம் இல்லாததால் நிறுத்திவிட்டேன். என் அண்ணன் ராஜய்யா அரசு பணியில் இருக்கும் போது எனக்கு ஸ்ரீ கணேஷ் பைனான்ஸ் உரிமத்தினை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அண்ணன் அரசு பணியில் இருக்கும் போது வட்டிக்கு பணத்தினை கொடுத்து வாங்குவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் நடத்தி வரும் ஸ்ரீ கணேஷ் பைனான்ஸ் -க்கு என் அண்ணன் தான் முதலீடு செய்துள்ளார் என்றால் சரியல்ல நான் தான் முதலீடு செய்துள்ளேன். எனக்கு நெசவு தொழிலில் நட்டம் ஏற்பட்டதால் அதனை நிறுத்திவிட்டு என் அண்ணன் ராஜய்யா கொடுத்த முதலீட்டில் தான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் ஸ்ரீ கணேஷ் பைனான்ஸ் நிறுவனத்தில் நிறுவனம் ஆரம்பம் ஆனது முதல் இன்றுவரை யாருமே வேலை செய்யவில்லை நான் மட்டும் தான் நடத்தி வருகிறேன். அ.சா.2 சென்றாயன் என் பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.2 என் சமூகத்தினை சேர்ந்தவர் என் உறவினர் அல்ல.

3. நான் எனது பைனான்ஸில் மாத வட்டிக்கு தான் கடன் கொடுத்து வருகிறேன். வார வட்டிக்கோ, நாள் வட்டிக்கோ நான் கடன் கொடுத்துவரவில்லை. மாத வட்டியாக ரூ.100 க்கு ரூ.1.50 வட்டியாக நான் கடன் கொடுத்து வருகிறேன். நான் கடன் கொடுப்பதற்கு ஆதரவாக காசோலை மற்றும் புரோ நோட் ஆகியவற்றை வாங்கிக் கொள்வேன் சொத்திற்கான ஆவணம் எதுவும் வாங்குவது கிடையாது. நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் விபரம்

பற்றியும், வட்டி வசூல்செய்யும் விபரம் பற்றியும், அசல் செலுத்தும் விபரங்களையும் நான் என் அலுவலகத்தில் அதற்கான கணக்கு வழக்கு நோட்டுகளில் எழுதி பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான்.

4. நான் கடன் கொடுக்கும் நோட்டில் எல்லாருடைய கணக்கு வழக்குகளும் அதில் எழுதப்பட்டு வரும். கணக்கு வழக்கு நோட்டினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் வரவு செலவு பக்கத்தினை மட்டும் நகல் எடுத்து என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கணக்கு வழக்கு நோட்டினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் வருமான வரி செலுத்துவதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20.04.2020 ம் தேதி எதிரி என்னிடம் ரூ.3 லட்சம் பணத்தினை வட்டிக்கு கடன் வாங்கினார். எதிரியிடம் மேற்படி கடனுக்கு அதரவாக என்ன ஆவணம் பெறப்பட்டது என்றால் எதிரிக்கு நம்பிக்கையின் பேரில் ஆவணங்களை பெறாமல் கடன் கொடுத்தேன்.

5. எதிரி எனக்கு மேற்படி கடனுக்காக 1 ½ மாதம் வட்டி செலுத்தினார். பொதுவாக ஒரு நபருக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் போது முதலில் பெற்ற கடனையும், வட்டியையும் திரும்ப செலுத்திய பின்பு தான் அந்த நபருக்கு அடுத்த கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரி எனக்கு 10.01.2021 ம் தேதி வரை எதிரி எனக்கு வட்டி கணக்கு முடித்தார். அப்போதே அசலையும் கொடுத்து முடித்தாரா என்றால் இல்லை. எதிரிக்கு நான் வட்டிக்கு கடன் கொடுத்திருப்பதால் அவர் மீது நான் உரிமையியல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் என் அண்ணனுக்கும் தான் முதலில் பழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி என் அண்ணன் ராஜய்யாவிடம் 2019 ம் வருடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றும் அந்த கடனுக்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை என் அண்ணன் வசம் எதிரி கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

6. எனக்கும் எதிரிக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன வருடம், மாதம் , தேதியில் எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி என் அண்ணனிடம் கடன் வாங்கும் போது இந்த வழக்கு காசோலையை கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாமல் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரி பிரபாகரன் என்னிடம் காட்டப்படும் காசோலையில் ஆங்கிலத்தில் கூட்டெழுத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் , பூர்த்தி செய்யப்பட்ட விபரங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எதிரி என் அண்ணனிடம் கடன் வாங்கிய ரூ.3 லட்சத்திற்கு சில மாதங்கள் வட்டி கொடுக்காததால் எதிரியின் அம்மா செல்வி என்பவர் ஆண்டிபட்டி கனரா

வங்கியில் கணக்கு வைத்துள்ள காசோலை எண். 291809 யை வட்டி பாக்கிக்காக என் அண்ணன் வசம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. 08.02.2021 ம் தேதி எதிரி என் அண்ணனிடம் கொடுக்கவேண்டிய வட்டி பணத்தினை செலுத்திவிட்டு எதிரியின் அம்மா பெயரில் கொடுத்த காசோலையை திரும்பி கேட்டதற்கு என் அண்ணன் அசல் கடன் தொகை ரூ.3 லட்சத்தினையும் கொடுத்துவிட்டு காசோலைகளை திரும்ப பெற்றுக்கொள் என்று சொன்னார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் அம்மா எதிரியின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். எதிரி என் அண்ணிடம் வாங்கிய கடனுக்கு கொடுத்த வழக்கு காசோலையை நான் பெற்று என் பெயர், தொகை, தேதியை பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த காசோலையை தான் 11.02.2021 ம் தேதி நான் கலெக்சனுக்காக என் பெயரில் போட்டேன் என்றால் சரியல்ல. அதே தேதியில் தான் எதிரியின் அம்மா கொடுத்த காசோலையையும் என் அண்ணன் கலெக்சனுக்கு போட்டார் என்றால் சரிதான் . அதே போல் 01.03.2021 ம் தேதி நான் எதிரிக்கும் என் அண்ணன் எதிரியின் அம்மாவிற்கும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தோம் என்றால் சரிதான். அதே போல் 14.04.2021 ம் தேதி நான் எதிரி மீது இந்த வழக்கினையும் , என் அண்ணன் ராஜய்யா எதிரியின் அம்மா மீது அதே தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என் அண்ணன் தாக்கல் செய்த வழக்கு எண். CC 42/2021 வழக்கும் நான் தாக்கல் தாக்கல் செய்த இந்த வழக்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்றால் சரியல்ல.

8. எதிரி என் அண்ணனிடம் இருந்து பெற்ற கடன் மற்றும் வட்டியை செலுத்திவிட்ட பின்பு காசோலைகளை திருப்பி தராமல் வழக்கு தாக்கல் செய்ததால் எதிரி 16.04.2021 ம் தேதி தேனி காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார் என்றும் , போலீசார் விசாரணையில் நாங்கள் இருவரும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டோம் என சொன்ன காரணத்தினால் வழக்கினை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என போலீசார் விசாரணையை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு தெரியாது என்றும், எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நானும், என் அண்ணன் ராஜய்யாவும் சதி திட்டம் தீட்டி எதிரியை மோசம் செய்யவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் என் அண்ணனுக்காக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.இந்த வழக்கினை தாக்கல் செய்ய எனக்கு உரிமையும், அதிகாரமும் இல்லை என்றும் வட்டிக்கு கடன் கொடுத்த காரணத்தினால் மேற்படி வழக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. என் அண்ணன் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழக்கு தாக்கல் செய்து அவருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.12 16:09:15 +0530

Judicial Magistrate, Andipatti.